நாள்.27.03.2026

**அசல் வழக்கு எண்.71/2019**
**பெயர். சிங்காரவேல்**

**த.பெ.வீரப்ப தேவர்**

**வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி என் மகனுக்கு உயில் எழுதிவைத்தார் எந்த தேதியில் என்றால் எழுதுன தேதி தெரியாது. அசல் வழக்கிலும் உயில் எழுதிய தேதியை நான் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. விஜயத்தம்மாள் உயில் எழுதிவைத்தபோது அவருடைய வயது என்ன என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் விஜயத்தம்மாள் வயது 85 என்று போட்டுள்ளேன் என்றால் சரிதான். விஜயத்தம்மாள் சுயநினைவு இல்லாமல் படுத்த படுக்கையில்தான் இருந்தார் என்றால் இல்லை நடமாடிக்கொண்டு தான் இருந்தார். விஜயத்தம்மாள் உயில் எழுதுவதற்கு எழுத்தரை நான் தான் ஏற்பாடு செய்தேன் என்றால் இல்லை அவங்களே ஏற்பாடு செய்தார். விஜயத்தம்மாளை காரில்தான் அழைத்து வந்தேனா என்றால் இல்லை அவரே நடந்து வந்துவிட்டார். நான் சொல்வதுபோல் இல்லை விஜயத்தம்மாள் சுயநினைவில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை.

உயில் ஆவணத்தில் விஜயத்தம்மாள் கையெழுத்து வீட்டிலிருந்து போட்டுக்கொடுத்தாரா என்றால் இல்லை அவங்களே நேரடியாக போய் கையெழுத்து போட்டார். விஜயத்தம்மாள் பஸ்சில் ஏறி செல்ல முடியாது என்றால் இல்லை அவர் நடமாடிக்கொண்டு தான் இருந்தார். உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் சங்கர், கார்த்திக். நான் தான் அழைத்துவந்து சாட்சி கையெழுத்து போட சொன்னேனா என்றால் இல்லை அவர்தான் அழைத்து வந்தார். உயிலை நான் தான்ஆவண எழுத்தரை வைத்து தயார் செய்து சாட்சிகளை அழைத்து சென்று விஜயத்தம்மாளிடம் கையெழுத்து வாங்கினேன் என்றால் இல்லை. உயில் ஆவணம் செல்லாது என்று அ.வ.எண்.4/2021 வழக்கை 1ம் பிரதிவாதி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். வீரப்ப தேவருக்கு சொத்து கிடையாது என்றால் ஆமாம். வீரப்ப தேவர் அவருடைய சுய சம்பாத்தியத்தை கொண்டு அவருடைய முதல் மனைவி சிந்தாமணி பெயரில்தான் வழக்கு சொத்தை வாங்கினார் என்றால் இல்லை. வீரப்ப தேவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக வழக்கு சொத்தை கொடுத்துவிட்டார் என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அவரது மகன் 2ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை. வழக்கு சொத்து இன்றுவரை 2ம் பிரதிவாதியிடம்தான் உள்ளது என்றால் இல்லை. வீரப்ப தேவருடைய குடும்ப சொத்தை நாங்களும் பாதி அனுபவித்துள்ளோம் பிரதிவாதிகளும் பாதி அனுபவித்துள்ளார்கள் என்றால் வீரப்ப தேவருக்கு சொத்தே இல்லை சிந்தாமணி பெயரிலுள்ள சொத்தைதான் நாங்கள் அனுபவித்து வருகிறோம். சிந்தாமணி பெயரில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 5 மா. அதில் நாங்கள் மற்றும் பிரதிவாதிகள் எவ்வளவு அனுபவித்து வருகிறோம் என்றால் நானும் 1ம் பிரதிவாதியும் ஆளுக்கு பாதி அனுபவிக்கிறோம். புல எண்.46/1பி1 ல் 15 ஏர்சை நான் அனுபவித்து வருகிறேனா என்றால் எனக்கு வந்த பாகத்தை நான் அனுபவிக்கிறேன். என் வீட்டிற்கு பின்புறம் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான 10 குழியில் கழிவறை கட்டி நான் அனுபவித்து வருகிறேன் என்றால் இல்லை 3 குழிதான். நான் சொல்வதுபோல் 3 குழி இல்லை 10 குழியைதான் அனுபவித்து வருகிறேன் என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் இல்லை செல்லாது. தாவாப்படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.